18/8/88 ①

# தமிழ்

## சில நினைவுகள்

**29-7-79**

உ

சிவமயம்

# செல்வி தமிழரசி வேந்தனார்

அமரநிலை எய்தியமை குறித்த

## நினைவாஞ்சலி



**29-7-79**

தமிழுக்கும் அமுதென்று பேர்! - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!



செல்வி தமிழரசி வேந்தனார் B. A. HONS (CEY.)

தோற்றம்:
**31-5-1953**

மறைவு:
**29-6-1979**

# செல்வி தமிழரசி வேந்தனார்
# வாழ்க்கை வரலாறு

---

சீர்பெறும் ஈழத்திரு நாட்டில் சிறப்புறு
பேர்கொள் யாழ்நக ரெனும் பதியில்
பார்புகழ் அறிஞர் பலருதி வேலணையில்
ஓர் உயர் அறிஞனாய் ஒப்பில் கவிஞனாய்

சீர்மிகு வித்துவானாய் செந்தமிழ் பண்டிதனாய்
சோர்விலாத் தமிழனாய் சொல்லேர் உழவனாய்
நேர்வழி நின்று நிதம்தமிழ் வளர்த்து
பேர்தனைப் படைத்தோன் பெருந்தகை வேந்தனார்

இல்லறம் தன்னை இனிதே நடத்திட
நல்லறப் செய்நாக லிங்கம் பெறும்
மெல்லியலாள் சௌந்தர நாயகியை மேதினியில்
துல்லியமாக துணைக்கொண்டார் தூயவர் போற்ற.

இரும்பின் திடமென இன்தமிழின் வடிவென
கரும்பின் சாறென கனிதேனின் சுவையென
விரும்பி இவர்கொண்ட விருந்தனைய வாழ்வதில்
அரும்பி மலர்ந்தன ஐவகை மலர்கள்.

விஜய ஆண்டதனில் விளங்குயர் வைகாசியெனும்
பயனுடை திங்கள் பதினெட்டாம் நாளதனில்
நயந்து பலருரைக்கும் நல்மிதுன லக்கினத்தில்
வியந்து வேந்தன்மகிழ்ந்திட விளங்கினார் தமிழரசி

ஆரம்பக் கல்வியை அருகினில் பரமேஸ்வராவில்
ஆர்வமுடன் கற்று ஐந்தாம் வகுப்பினில்
அரிவையர் கற்றிட அமைந்துள ஓர்அகமாம்
அணிசேர் இந்துமகளிர் கல்லூரியதை நாடினார்.

ஆர்வமுடன் கல்வியை அங்கவர் கற்று
ஆசிரியர் குழாமதன் அன்பதனைப் பெற்று
தேர்வினில் வெற்றிகள் தேடியே வந்திட
தெரிவினைக் கண்டார் தெரிவானார் உயர்கல்விக்கு

வழுவில் கல்வியை வளமுடன் கற்க
எழுபத்தி நாலில் ஏகினர் பல்கலைக்கழகம்
பழுதில் முறையில் பண்பாய் ஆய்ந்து
முழுமை பெற்றிட முயன்று நின்றார்.

தந்தையின் வழியதில் தானும் விரும்பி
பைந்தமிழ் ஆய்வினை பழுதற செய்திட
சிந்தையில் ஆர்வம் சிறந்து ஓங்கிட
செந்தமிழ் அதனை சிறப்பாய் கொண்டார்.

தொட்ட கல்வியை துணிவுடன் தொடர்ந்து
பட்டமும் பெற்றார் பலர்போற்ற அங்கு
இட்டம் கொண்டே இனி எம். ஏ. செய்ய
திட்டமும் போட்டார் தினமும் அதற்காய்.

நல்வளம் மிக்குடை யாழ்ப்பாண நாடதன்
பல்கலைக் கழகமெனும் பண்பார் கூடத்தில்
நல்கலைத் துறையதில் நற்றமிழ் பயிற்றுவிக்கும்
சொல்லரு கலையரசியின் சோர்விலாத் தங்கையாய்

பல்வகைச் சிறப்புடை பதியாகு மொறட்டுவைசேர்
பல்கலைக் கழகமதில் பக்குவமாய் பொறியியலை
நல்லாய் பயிற்றுவிக்கும் நம்பி இளங்கோ வின்
நல்லதோர் தங்கையாய் நற்றமிழ் செல்வமாய்

கல்லூரிப் படிப்பதை கச்சிதமாய் முடித்து
எல்லோரும் போலிங்கு ஏற்றஉயர் படிப்பை
நல்லாக கண்டிடும் நம்பி இளஞ்சேயின்
நல்லுயர் அக்காளாய் நற்குணச் செல்வியாய்

நல்லவர் போற்றிட நற்பணியாற்றிடும் - பொறி
வல்லுனர் ஆகி புகழ்பெறு சின்னையா வின்
நல்லோர் மைத்துனியாய்' நர்மதா வின் சித்தியாய்
எல்லோரும் ஏத்த இன்பமாய் வாழ்ந்திட்டார்.

இத்தனைச் சிறப்பும் இங்கிவர் பெற்றதனாலோ
சித்தார்த்தி ஆண்டதனில் சீர்மிகும் ஆனியில்
பத்தைந்தாம் நாளதனில் பயன்மிகு வெள்ளியில்
சித்தம் கொண்டான் சேர்த்திட இறைவன்.

அன்பொடு வளர்த்திட்ட அன்னை தானும்
அன்புடை சோதரியும் சோதரரும் அயலவரும்
இன்னும் மற்றுள இனத்தவரும் ஏங்கி
என்னே ஈதென்றழ இறைவனடி சேர்ந்திட்டார்.

* * *

# என்ன கொடுமை!

வித்துவான் வேந்தனார் குடும்பம் தமிழ்ப்பண்பாட்டிலே திளைத்த குடும்பம். அவர் தனது பிள்ளைகளுக்குத் தமிழ்மரபுக்கேற்ற பெயர்களையே சூட்டினார். அவர்களில் ஒருவர் தமிழரசி. முன்பு, பெற்றோர்கள் பிள்ளைகளுக்குப் பெயரிடும்பொழுது கடவுளரது பெயர்களை இட்டனர். காரணம், பிள்ளைகளை அழைக்கும்போதாவது கடவுளின் பெயரைக் கூறலாம் என்பதே. கந்தன், முருகன், சுப்பிரமணியன், அம்பிகாபதி, உமையாள், பார்வதி போன்ற பெயர்களை வைக்கும் போது அப்பிள்ளைகளை அழைக்கும்போதாவது இறைவனின் பெயரைக் கூறலாம்.

இதற்கமையவே, வேந்தனார் அவர்களும் தமது பிள்ளைகளுக்குத் தமிழ்மணம் கமழும் பெயர்களை இட்டார். அவர்களுள் ஒருவர் தமிழரசி. அவரின் பெயரைக் குறிக்கி அழைக்கும்போது சிலர் 'தமிழ்' என்றும், சிலர் 'அரசி' என்றும் குறிப்பிடுவர். தமிழ், இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர். அந்தத் தமிழின் அரசியாகத் தமது மகள் விளங்கவேண்டுமென அரசன் (வேந்தனார்) விரும்பினார். மகளும், தகப்பனை இழந்த நிலையில், அவரின் விருப்பத்திற்கமையவே பல்கலைக் கழகத்திலே தமிழைச் சிறப்புப்பாடமாகப் படித்து அதில் விசேட சித்தி பெற்றார். தமிழில் முதுமாணிப்பட்டம் பெறவும் முயற்சிகள் செய்தார். ஆனால் காலன் சதிசெய்துவிட்டான். அவரை அவர் குறிக்கோள் நிறைவேறமுன் பறித்துவிட்டான்.

இந்த ஆண்டு ஆசியுரைகளும் வாழ்த்துரைகளும் வழங்குவதற்குப் பதிலாக இரங்கலுரைகள் எழுதும் ஆண்டாக மாறிவிட்டது. வாழ விரும்புபவர்கள், வாழவேண்டியவர்கள் வாழமுடியாது பிரிக்கப்படுகின்றனர்.

தமிழரசியின் தாயார் மகளது வருங்காலம்பற்றிப் பல கோட்டைகள் கட்டியிருந்தார். மகள் நோய்வாய்ப்பட்டிருந்தபோது அவருக்கருகே நின்று ஆவன செய்தார். அவரது மனம் இன்று உடைந்திருக்குமாற்றை எம்மால் விபரிக்க முடியாது. பெற்ற மனம் ஒவ்வொரு கணமும் துடித்துக்கொண்டேயிருக்கும். கலையரசி, சகோதரித் துணையின்றித் தவிக்கின்றார். இளங்கோ, தமிழரசியுடன் நெருங்கிய பாசமுடையவர். தங்கையின் வேதனையைத் தனது வேதனையாக அனுபவித்தவர். இளஞ்சேய், கலையரசியின் அன்பையே நாடி நிற்கின்றார். இவர்களின் இல்லத்திற் புகுந்த பின்னையார் படுபாடுபட்டும் முயற்சிகள் கைகூடாது ஏங்கி நிற்கின்றார்.

மனத்திற்கு ஒரேயொரு நிம்மதியுண்டு. தமிழரசியை வாழவைக்கத் தாயாரும் சகோதரசகோதரியும் அத்தானும் உற்றாரும் நண்பர்களும் பலவாறு முயன்றார்கள். அவர்கள் கைக்கொள்ளாத நடவடிக்கையொன்றுமில்லை. ஆனால், இறைவன் எம்மைத் தொடர்ந்து சோதித்து வருகின்றான். வாழவேண்டியவர்களைத் தன்பக்கம் அழைத்துக் கொள்கின்றான்.

இஃது என்ன கொடுமை!

பேராசிரியர் சு. வித்தியானந்தன்
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

✲✲✲

# தமிழரசி

வித்துவான் வேந்தனார் அவர்களை ஒருமுறைதான் (1962 ஆம் ஆண்டு என்று நினைக்கின்றேன்) கண்டுபேச வாய்ப்புக் கிடைத்தது. அன்று அவர் என்னை அன்போடு வரவேற்றுப் பண்போடு உபசரித்தமை இன்றும் என் கண்முன்னே நிற்கின்றது! மறக்கவே முடியாத பண்பாளர். அவரின் மகள் கலையரசி என்மாணவி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலே நான் விரிவுரையாளராக இருந்தபோது தமிழைச் சிறப்புப பாடமாகக் கற்றார். வித்துவானின் அன்புமகன் இளங்கோ எமது குடும்ப நண்பர். மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்தாலும் எமது இல்லத்துக்கு அண்மையிற் குடியிருந்து எம் குடும்பத்தோடு நெருங்கிப் பழகும் பண்பாளர். தேந்தனாரின் மகள் தமிழரசி என் மதிப்புக்குரிய மாணவி. நாலாண்டுகள் களனிப் பல்கலைக்கழகத்தல் என்னிடம் தமிழ்கற்றவர். என் பாரியாரின் அன்புக்கும் மதிப்புக்குமுரியவர். இவ்வாறு வித்துவானின் குடும்பத்தோடு எமக்கு நெருங்கிய தொடர்பும், குடும்ப நலனில் மிகுந்த அக்கறையும் நிலவிவந்தது; வருகின்றது. இந்நிலையிற்றான் தமிழரசியின் மறைவு என்னையும் என் பாரியாரையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. காலன் நல்லவர்களை நீண்டகாலம் வாழவிடுவதில்லையே!

தமிழரசி பெயருக்கேற்ப உயர்ந்த பண்புகள் உடையவர். நாலு ஆண்டுகள் மாணவியாக இருந்தபோது அவரிடம் பெண்களுக்குரிய நற்பண்புகள் யாவும் இருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன். வித்துவான் வேந்தனாரின் மகளல்லவா? தமிழ்ப்பண்புகள் இருந்துதானே ஆக வேண்டும்! மாணவியாக இருந்தபோது, அவர் எதிர்காலத்திலே தமிழ் அறிஞராகவும் நல்ல குடும்பப் பெண்ணாகவும் விளங்குவாரென நம்பினேன்! விதிவிளையாடிவிட்டது!

விரிவுரையாளர் மத்தியிலும், மாணவர் மத்தியிலும் மங்காத தனி மதிப்பைப் பெற்றிருந்தவர் தமிழரசி. களனிப் பல்கலைக் கழகத் தமிழ் மன்றத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர்; இந்து மாணவர் மன்றத்தில் அக்கறைகாட்டி முன்னின்று பாடுபட்டவர். களனி விநாயகர் ஆலயத்தில் இந்து மாணவர் எடுத்த நவராத்திரிவிழாவிலே தமிழரசி ஆற்றிய சொற்பொழிவு இன்றும் என் காதுகளில் ஒலித்த

வண்ணமிருக்கிறது. தந்தையைப்போலவே, தன் பெயருக்கேற்பத் தமிழில் அரசியாகவே விளங்கினார். தமிழ் நங்கைக்கான அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற குணங்களோடு கூடிக் காணப்பட்டார். ஆனால் இல்லற வாழ்வின் இன்பத்தைப் பெற முடியாமற் செய்துவிட்டானே காலன்!

ஒருநாள் நானும் என் பாரியாரும் களனிப் பல்கலைக்கழகத்துக்குச் சென்றுகொண்டிருந்தோம். பஸ்நிலையத்தில் தமிழரசி தம் தோழியோடு பஸ்சுக்குக் காத்துக் கொண்டு நிற்பதைக் கண்டோம். மோட்டார் வண்டியை நிறுத்தி இருவரையும் வண்டியில் ஏறுமாறு பணித்தேன். இருவரும் வண்டியில் ஏறிக் கொண்டனர். அவர்கள் இருவரோடும் என் பாரியார் வினாக்களைத் தொடுத்துக் கொண்டே இருந்தார். அவ் வினாக்களுக்கு மாணவியர் இருவரும் பதிலளிப்பதைக் கேட்டுக் கொண்டே வண்டியை ஓட்டினேன். களனிப் பல்கலைக் கழகத்தைச் சென்றடைய அரை மணி நேரம் சென்றது. பல்கலைக் கழக வாயிலில் இருவரும் வண்டியிலிருந்து இறங்கிக் கொண்டனர். அவர்கள் இருவரும் இறங்கிச் சென்ற பின்னர், என் பாரியார், ''அடக்கமான பண்புள்ள பெண், பூவும் பொட்டுமணிந்து தமிழ்ப் பெண்ணாகவே காணப்படுகின்றாள். படிப்பில் எப்படி ? '' என்று வினவினார். ''வேந்தனாரின் மகள் தானே ! சொல்ல வேண்டுமா ? '' என்று பதிலளித்தேன். ''தமிழரசிகுத் தலைவனாகும் தமிழரசன் யாரோ ? '' என்று வாழ்த்தினார் என் பாரியார். அதனை நாம் எல்லோரும் பார்த்து மகிழ முடியாதவாறு காலன் கொடுமை செய்து விட்டானே !

தமிழரசியின் மறைவு களனிப் பல்கலைக் கழகத் தமிழ்மொழி மூல மாணவரையும், சிறப்பாக என்னையும் என் பாரியாரையும் நீங்காத துன்பக் கடலில் ஆழ்த்தியுள்ளது !

தமிழரசியின் ஆன்மா சாந்தியுறுக !

கலாநிதி ஆ. கந்தையா
தலைவர், தமிழ், இந்துப் பண்பாட்டுத் துறை
களனிப் பல்கலைக் கழகம்.

⁂

# அஞ்சலி

தமிழே தன் உயிரென மூச்சாலும் பேச்சாலும் உலகுக்கு உணர்த்திச் செந்தமிழ் மரபு வழி காத்த என் அருமை நண்பர் வித்துவான் வேந்தனாரின் தவப் புதல்வியாகப் பிறந்து, 'தமிழ் அரசி' என்னும் தந்தை புனை பெயருக்கு இலக்காக வாழ்ந்து, இடை நடுவில் எம்மை விட்டுப் பிரிந்து இறைவனைச் சேர்ந்த தமிழரசியின் நினைவு என்றும் எம்முடைய மனதைவிட்டு அகலாது.

வித்தியாலங்காரப் பல்கலைக் கழக வளாகத்தில் சிறப்புத் தமிழ்ப் பட்டதாரி வகுப்பில் படித்துக் கொண்டிருந்த தமிழரசிக்கு இறுதியாண்டில் கல்வி கற்பிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. மகளைக் காணும் போதெல்லாம் தந்தையின் நினைவே எனக்கு வரும். காரணம் தந்தையிடம் கண்ட அதே குணங்களையே மகளிலும் காணக் கூடியதாக இருந்தது. வகுப்புக்கு வெளியே இரண்டு நிமிடம் உரையாடினுல் அவரது குணங்கள் அத்தனையும் தெரிய வரும். தமிழ் மொழியில் அளவற்ற ஈடுபாடும் அதனைத் தன் வருங்காலத்தில் போற்றி வளர்க்க வேண்டுமென்ற ஆசையும் கொண்டிருந்தார், ஆனுல் விதி சதி செய்து விட்டது.

அடக்கம், ஒடுக்கம் என்ற பெண்மைப் பண்புகள் தமிழரசியிடம் நிறையக் குடி கொண்டிருந்தன. ஆயினும் யாராவது சரியான தொன்றைப் பிழையென வாதாட முற்பட்டால் தமிழரசியின் அஞ்சாமைக் குணம் தெரிய வரும். இதுவும் அவர் தந்தையின் அரிய பண்பு. ஒரு காலத்தில் யாழ்ப்பாண மேடைகளில் வேந்தனர் பேச எழும்பும் போதெல்லாம் அற்ப கல்வி கற்றவர்கள் கதிரையில் அமர்ந்தே விடுவார்கள்.

தமிழரசி மேற்படிப்புப் படிக்க ஆசைப்பட்டார். நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் அவர் குடும்பத்தவர்களின் ஆசைப் பொக்கிசமாக விளங்கியமையால் அந்நூலினை அடிப்படையாகக் கொண்டு முதுமாணி, கலாநிதிப்பட்ட ஆய்வுகளைக் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் எமது மேற்பார்வையில் தொடங்கிச் செய்ய விரும்பினர். அவர் கொழும்புக்கு வரும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். தமது ஆவலைப் பூர்த்தி செய்வதற்கிடையில் அவர் இவ்வுலகை நீத்தது என்னைக் கவலைக் கடலில் ஆழ்த்திவிட்டது.

தமிழரசி எடுக்கும் மறுபிறப்பில் நிச்சயம் தமிழுக்காகவே வாழ்வார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அன்னாரின் ஆன்மா சாந்தியடைவதாகுக.

பேராசிரியர் ஆ. சதாசிவம்
தமிழ்த்துறை
கொழும்பு பல்கலைக் கழகம்

# தமிழரசி

தமிழரசியை வித்தியாலங்கார வளாகத்திலே முதல்வருட மாணவியாக நான் கண்டபொழுது தெரிந்தவர் ஒருவருடைய மகள் என்பதால் சிறிது அக்கறையுடன் கவனித்தேன். ''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'' என்பது பழமொழி மட்டுமன்று. தமிழரசியைப் பொறுத்தவரையில் அவர் அதற்குத் திருஷ்டாந்தமாய் இருந்தார். எளிமை, இனிமை, இங்கிதம், அடக்கம், அறிவுநாட்டம் இவையெல்லாம் தக்கபடி அவரிடத்திற் குடிகொண்டிருந்தன.

இளமையில் இறத்தல் துன்பமிக்க சோகநிகழ்ச்சியாகும். அதிலும், நற்குணங்களுக்கு உறைவிடமாய் விளங்கிய ஒருவர் அகால மரணமடைவது எவரையும் துயரில் ஆழ்த்தககூடிய சம்பவமாகும். தமது தமிழ்ப்பற்றுக்கு உருவம் கொடுப்பதுபோல, மகளுக்குத் தமிழரசி என்று பெயர் சூட்டினர் வேந்தனர். பெயருக்கு ஏற்ப அவர் வாழ்ந்திருப்பார் என்றே கூறவேண்டும். ஆயினும் நடந்தது வேறு. எதிர்பாராத இச்சோகத்தால் தாக்கப்பட்டிருக்கும் தமிழரசியின் தாயார், உடன்பிறந்தோர் முதலியோருடன் துக்கத்தை ஓரளவு பகிர்ந்துகொள்வதன்றி வேறென்ன செய்ய முடியும்.

பேராசிரியர் க. கைலாசபதி

தமிழ்த்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

* * *

# அருமருந்தன்ன மாணவி

வெறும் அறிவிலே சோகம் ஏற்பட்டுவிடுவதில்லை. நல்லது அழியும் பொழுதுதான் சோகம் தோன்றுகின்றது. அழகு சிதையும்பொழுது தான் அவலம் ஏற்படுகின்றது. தமிழரசியின் மறைவு சோகத்தைத் தருவது.

வாழ்க்கையின் வாசற்படியில் பொலிவுடன் நின்ற ஓர் உயிர் — அழகுத்துளிர் — விதியால் இழுத்தெறியப்பட்டுவிட்டது.

தமிழரசியைப்பற்றி நினைக்குப்பொழுதெல்லாம் வித்தியாலங்கார வளாகத்தில், தமிழ்மாணவிகளிடையே தமிழரசியாய், "நாற்குணமும் நாற்படையாய்" பெண்மை அரசோச்சும் ஓர் அருமருந்தன்ன மாணவியின் தோற்றமே மனக்கண்முன் விரிகின்றது. அழகுக்கேற்ற அடக்கம், அடக்கத்தை விதந்து கூறவைக்கும் அறிவு, தமிழரசி எமது பண்பாட்டுணர்வின் பூரணகும்பமாகவே மிளிர்ந்தார். கும்பம் சிதைந்துவிட்டது. சிதை பலிகொண்டு விட்டது.

ஒரு தமிழ்ப்பாரம்பரியத்தின் கிளையொன்று ஒடிந்துவிட்டது. இந்த இழப்பைத் தாங்குகின்ற குடும்பத்தினர்க்கு எம்மால் வெறும் அநுதாபத்தைத்தானே தெரிவிக்க முடிகிறது.

ஆனால் கற்பித்த ஆசிரியன் கூறுவது அநுதாபம் மட்டுமன்று அவனுக்கும் அது ஓர் இழப்புத்தான்.

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

***

# ‘ தமிழ் ’ ஒரு முத்து

எங்கள் கல்லூரி உருவாக்கித் தமிழன்னைக்கு அளித்த நல்லாரத்தில் ஒரு முத்து ‘‘தமிழ்’’. தமிழ் மணம் கமழ, சைவப்பண்புதிகழ, இன்முகம் மலர எங்கள் நெஞ்சங்களில் என்றும் நிலைபெற்று உயர் வாழ்வு வாழ்ந்த தமிழரசி இறைவனடி சேர்ந்துவிட்டார்.

தண்டமிழைத் தன் தீங்குரலால் செந்தமிழாக்கி நாவளம்மிக்க நன்மாணவியாகத் திகழ்ந்த நாவுக்கரசி மீளாத்துயிலில் ஆழ்ந்துவிட்டார். பட்டப்படிப்பிற்காக வித்தியாலங்கார வளாகத்திற்குச் சென்று தமிழிலே சிறப்புப் பட்டம்பெற்று, தமிழ்த்தொண்டினை ஆரம்பிக்க இருந்த வேளையில் காலன் அவரைக் கவர்ந்துவிட்டான்.

தனது பழைய கல்லூரியின் பாசத்தொடர்பால் அதன் முன்னேற்றம் கண்டும் கேட்டும் பேருவகை கொண்ட ஓரிதயம் ஓய்ந்துவிட்டது. எங்கள் கல்லூரியின் வளர்ச்சிக்குத் தன் இதயபூர்வமான, நல் ஆக்கத்தையும், ஊக்கத்தையும் உதவிய ஓர் உத்தமமான பழைய மாணவியை நாம் இழந்துவிட்டோம்.

நான் இந்துநாகரிகம் கற்பிக்கத் தொடங்கிய காலத்தில் எனக்கே ஓர் வழிகாட்டி போலவும் சக ஆசிரியை போலவும் பல நூல்களைத் தேடித்தந்து அளப்பரிய உதவிசெய்தார். அந்நிலையில் அவரது அறிவு வளமும் ஆய்வுத்திறனும் கண்டு நான் பெரு வியப்புற்றேன்.

தன் உடலையும் உயிரையும் ஒருங்கே வருத்திய கொடிய நோயுற்ற காலத்திலும், தன் அயரா உள்வலிமையாலும், தளரா முயற்சியாலும் தனது இலட்சியப் பாதையில் இறுதிவரை சென்ருர். ஆனுல் நன் மணம் கமழும் மலரொன்று கட்டவிழ்ந்து மணம் பரப்பும் முன்னரே பறிக்கப்பட்டுவிட்டது.

‘தமிழின்’ மறைவுகண்டு மனம் நைந்துருகும் அவர் அன்னையார் உடன்பிறந்தார் உற்ருர் உறவினருடன் நாமும் சேர்ந்து அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

ப. இராமநாதன்
அதிபர்,
யாழ். இந்துமகளிர் கல்லூரி.

* * *

# வேந்தன் பெற்றெடுத்த தமிழரசி

தேவர் திருநகர், பல்கலைக்கழகச் செனற்சபைக்கூட்டத்தில் துணை வேந்தர் பிரகஸ்பதி கூறுகிறார். "தகுதிவாய்ந்த ஒருவர் தமிழ்ப்பேராசிரியர் பதவிக்கு அமர்த்தப்படும்வரை, 1966 தொடக்கம் இப்பீடத்தை அலங்கரித்த "தமிழ்வேந்தன்" ஓய்வுபெற முடியாது, தயவுசெய்து அவரே ஒருவரைத் தெரிந்து தரவும் வேண்டும். இது எங்கள் அன்பான வேண்டுகோள்". "தமிழ்வேந்தன்" சிந்தனை தோய்ந்த முகத்தோடு அமர்ந்திருக்கிறார்.

தமிழ் கற்கத் தன்னையே உருக்கி, உருவழிந்தபோதும், முத்தமிழ்த் திருநிறைந்து நின்ற தன் கனிஷ்ட புத்திரியை, 'தமிழ் அரசி'யை நினைந்தார்போலும். தேர்வின் முடிவு ஒருவாறு தெரிந்தபின் கூட்டிச் சென்று வானவர் பல்கலைக்கழகத் தமிழ்ப்பீடத்து அமர்த்தித் தான் ஓய்வுபெற்று மகிழ்ந்தான். "தமிழ்வேந்தன்" என்று நினைப்பதைத் தவிர வேறு எப்படித்தான் நினைந்து ஆறமுடியும் 'தமிழின்' பிரிவை.

இனிமையும் பணிவும் களிநடம் புரியும் தோற்றம், அடக்கமே உருவான ஆழ்ந்த அறிவின் சாயல், பெண்மையின் இலக்கணம் இவை எல்லாம் ஒன்றாகி உருவெடுத்த தமிழுருவம் வேந்தன் பெற்றெடுத்த தமிழரசி. விதி, நின் குடும்பத்தை மட்டும் வறுமையாக்கி விடவில்லை. நின்கலைத்திறன் கண்டு நின் தந்தை நலன் நினைந்து நின்ற அவன் நண்பர்களையும், ஈழத்தமிழ் அறிஞர் மன்றத்தையுமே வறுமையாக்கிவிட்டதே. பண்ணவர் கண்ணீர் கொண்டு விடைதரத் தேவர் கற்பகமலர் தூவி வருகை பாடினரோ?

'தமிழ்' சாகவில்லை. சாகவும் மாட்டாள். அவளை நினைப்பற நினைக்கவைக்கும் பண்பை வாழ்த்தி, அவள் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம். சாந்தி.

க. சிவராமலிங்கம்
விரிவுரையாளர்,
கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை.

※ ※ ※

# விதியின் விளையாடல்தான் என்னே!

" யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம் "

என்று பாரதியார் தமிழ்மொழியின் இனிமையையும் பெருமையையும் தரணிக்கு எடுத்தியம்பினார். அதே இனிமையுடனும் எளிமையுடனும் 'தமிழ்' என்ற மெல்லியலாள் எம்மிடையே உலவினாள். தனது மென்மையான செல்லமான பேச்சுக்களால் எம்முள்ளங்களையெல்லாம் கொள்ளைகொண்டாள். ஆனால் அந்தோ! கொடிய காலன் அந்தப் பூங்கொடியை ஈவிரக்கமின்றி அழித்தொழித்துவிட்டான். தான் எப்படியும் உயிர்வாழவேண்டும், தான்பெற்ற கல்விச் செல்வத்தினால் தானும் பயன்பெற்று இவ்வையகமும் பயன்பெற வேண்டும், மேலும் தனது கல்வியினைத் தொடர்ந்து பல பட்டங்களைப் பெற வேண்டும் என்ற அவா எங்கள் தமிழின் உள்ளத்தில் வேரூன்றியிருந்தமையினாலன்றோ, தன்னை எப்படியும் காப்பாற்றி உயிர்வாழ வைக்கும்படி வைத்தியர்களையும், தனது நண்பர்களையும் கெஞ்சிக் கேட்டாள். ஆனால் விதி யாரைத்தான் விட்டது? யார்மீதுதான் கருணை காட்டியது?

ஏப்ரல் மாதம் 23ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தனின் துணைவியார் கமலா இறந்த செய்தியினைக் கலையரசி குடும்பத்தினருக்கு அறிவிப்பதற்கு இரவு 11-00 மணியளவில் நானும் எனது அருமைக் கணவரும் ஓடோடிச் சென்ற பொழுது, தமிழரசிதான் உடல் பதறியவண்ணம் அழுகை பொங்கி வர, வெளியே வந்து அச்செய்தி தங்களுக்குத் தெரியும் என்று கூறினாள். அச்செய்தி கேட்ட நாளிலிருந்து பேராசிரியரும் பிள்ளைகளும் எப்படி இப்பிரிவினைத் தாங்கப் போகின்றார்கள் என்று அடிக்கடி என்னிடம் கூறிக் கவலைப்பட்டாள்.

மேமாதம் 23ஆம் திகதி தமிழ் யாரை 'Uncle' என்று பாசத்தோடும், உரிமையோடும் அழைத்து வந்தாளோ, அதே Uncle ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் இருந்தவேளை, அச்செய்தியை எனது மகன் கலையரசி குடும்பத்தினருக்கு, அறிவிக்கப்போன சமயத்

திலும் தமிழரசிதான் அச்செய்தியை முதலில் கேட்டாள். அதைக் கேட்டதும் அவளடைந்த அதிர்ச்சியை விவரிக்க முடியாது. Uncle இறந்துவிட்டார் என்ற செய்தியைக் கேட்டுப் புழுவாய்த் துடித்தாள். அக்கொடிய செய்தியை செவிமடுத்த நாளிலிருந்து அவள் நோய்வாய்ப் பட்டாள். அப்படியிருந்தும் தான் எப்படியும் Uncle இன் திருமுகத்தை ஒருதடவை பார்த்துவிடவேண்டும் என்று அடம்பிடித்துத் தட்டுத்தடு மாறி வீட்டிற்கு வந்து இறுதி மரியாதையைச் செலுத்தினாள்.

இனிமேலும் இவ்வுலகில் வாழ்ந்து காலனின் கொடுமையான அரக்கத்தனத்தைக் கண்டு துன்புறவிரும்பாமல்போலும், ஜுன் மாதம் 29ஆம் திகதி எங்கள் தமிழ் எம்மை விட்டுப் பிரிந்துவிட்டாள். கலைச் சோலை வாயிலை அடைந்ததும் என்கண்முன்னே தோன்றுவது தமிழின் இனியமுகம். சாந்தமே உருவான அவளது வதனத்தில் அழகிய புன் முறுவல் மேலும் மெருகூட்டி நிற்கும்.

எல்லோருடனும் அன்புடனும் பண்புடனும் பழகுபவள். குருபக்தி மிக்கவள். தனது கல்லூரி வாழ்க்கையிலும்சரி, பல்கலைக்கழக வாழ்க் கையிலும்சரி தனக்குக் கல்விபுகட்டிய ஆசிரியர்களை குருபக்தியுடன் போற்றும் பண்புடையவள். எல்லாவிதமான நற்பண்புகளும் ஒருங்கே அமைந்த அருந்தவப் புதல்வியை அவள் வாழ்வு மலரமுன்பே இறை வன் பறித்துவிட்டானே.

தமிழின் சகோதரியின் திருமணக்கோலத்தைக் கண்டுகளிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. தமிழின் திருமணத்தை நாங்களே முன் னின்று நடத்தவேண்டும் என்று நானும் கணவரும் பலதடவை கதைத்ததுண்டு. ஆனால் திருமணம் செய்துவைத்து மகிழ்வதற்கு இன்று தமிழில்லையே! திருமணத்தை முன்னின்று நடத்துவதற்கு அவ ளின் Uncle இல்லையே! விதியின் விளையாடல்தான் என்னே!

'தமிழ்' என்றும் எங்கள் நெஞ்சத்தில் நிலைத்துநிற்பாள். அவளின் ஆத்ம சாந்திக்காக நாம் பிரார்த்திப்போமாக.

— திருமதி தயாநிதி செல்வநாயகம்

* * *

## ஆருது என் துயரம்
## அணையாது மனக்கொதிப்பு

கந்தர்மடம் தன்னில் கலையோங்கும் கலைச்சோலைதனில்
அன்புமுகங் காட்டி அறிவால் நல்லொளியீட்டி
கற்ருேர்க்குக் காவலாளாய் மற்ருேர்க்குப் பாவலாளாய்
உற்ருர் உறவினர்க்கு உயர்ந்த உபன்ஞாசகியாய்
கோபுரத்தில் வாழ்ந்தாலும் கோடாத மனமுடையோய்
துடியாய் துடித்துன்றன் திருமுகங் கண்டேகிடுவேன்
அத்தனையும் நினைத்தால் என்னெஞ்சு உருகுதம்மா
அத்தனுனைக் காணுது அழுகின்றேன் அன்னன்யான்.

சின்னஞ்சிருர் உந்தன் தீந்தமிழைக் கேட்டாலோ
கன்னலுந் தேனும் கலந்ததெனப் பருகிடுவார்
மங்கையர் களுந்தன் மறத்தமிழைக் கேட்டாலோ
சங்கத் தமிழெல்லாம் தாகமாய்க் கற்றிடுவார்
பாவலர் களுந்தன் பாடுந்திறன் கண்டாலோ
நாவலன் என்றே நயங்கூறி ஏகிடுவார்
சீர்திருத்தம் பேசும் திருமறவர் கூட்டமெலாம்
பாராட்டுவா ருந்தன் பரந்த மனப்போக்கை
தர்க்கத்தில் வல்ல தத்துவர்கள் உப்பேச்சின்
அர்த்தமே புரியாது அகன்றிடுவார் வந்தவழி
முத்தமிழின் வித்தகியே முழுநுணர்ந்த சத்தியவதி
சித்தமும் புத்தியும் சிதைந்துநான் வாடுகின்றேன்.

வள்ளுவன் கம்பன் வையம்புகழ் ஒளவை
தெள்ளு தமிழீந்த தென்ஞட்டுப் பாரதி
கள்ளுவெறி கொள்ளக் கவிபாடும் ரவீந்திரர்

உள்ளமதை அள்ள உயர்நாடகம் தந்த
வெள்ளையர் நாட்டு வெள்ளியெனும் ஷேக்ஸ்பியர்
தங்கள் சபைக்கு தலைவியாய் உந்தனையே
எங்களிட மிருந்து ஈர்த்துமே யேகினரோ
சீதையொடு சகுந்தலை சீர்கற்புக் கண்ணகி
கோதை தமயந்தியும் குருநாட்டுக் குந்தியும்
பண்டிதை களாகவே பாடங்கள் கேட்டிட
அண்டருலகுக் குனையழைத் தனரோ அம்மாவே

மல்லிகைப் பந்தல் வளங்குன்றி விட்டதம்மா
அல்லிகளை வைக்கா தப்படியே நிற்குதம்மா
அருகிலுள்ள மரங்கள் அல்லும் பகலுமாய்
பெருகிய சத்தமிட்டு பிதற்றின உன் பிரிவால்
பெற்றவளும் உந்தன் பிரிவாலே பிதற்றுகின்றுள்
ஏற்றமிகு கலைச்சோலையும் எழுச்சியற்று போச்சுதம்மா
பற்றியுனைத் தூக்கி பண்புடனே ஆதரித்த
மற்றவுன் சோதரியோ மாய்கின்றுள் வேதனையால்
அன்புச் சோதரர்கள் சோதரி நீயின்றி
துன்பத்தால் துவண்டு துவள்கின்றுர் மேதினியில்
வீற்றிருந்த வீடு விளக்கற்ற மாடமதாய்
போற்றுவா ரற்றுப் போய்விட்ட தென்தங்காய்

ஆறுது என்துயரம் அணையாது மனக்கொதிப்பு
ஏறுது என்காதில் இனிய தமிழோசை
தமிழதனைக் கேட்கத் தரணியிலே யாருண்டு
அமிழ்தனைய தங்காய் யாருண்டு அவனியிலே.

— சதா — சிவலோகநாதன் —
தென்புலோலியூர்.

⁂

# தன்னலம் கருதா நண்பி

அன்பும் பண்பும் நிறைந்த ஒரு நண்பியை இழந்து விட்டேன் என நினைக்கும்போது அந்நினைவினையே நம்பமுடியாது இருக்கின்றது. காலத்தின் கோலமாய் காலன் மரணத்தின் போர்வையில், செல்வி தமிழரசி வேந்தனுரை எம்மிடமிருந்து பிரித்து நாம் காணுத இடத்திற்குக் கொண்டு சென்று விட்டானே என்பதனை எண்ணுகையில் துடிக்கும் நெஞ்சங்கள்தான் எத்தனை! எத்தனை! அத்தனை நெஞ்சங்களிற்கும் அன்பெனும் நீருற்றிச் சீராட்டிச் சிந்தை மகிழ்வித்துவிட்டு, எதிர் பாராத வகையில் அனைவரையும் பரிதவிக்க விட்டுச் சென்றதுதான் ஏனோ புரியவில்லை. இதைத்தான் விதி என்பதோ!

ஐந்து ஆறு வருடங்கள் பழகிய எம்மாலேயே இந்தப் பேரிழப்பைத் தாங்கிக்கொள்ள முடியாத வகையில் இருக்கின்றது என்ருல் ஒன்ருய் உண்டு உறங்கிப் பழகிய வீட்டவர்கள் உறவினர்கள் இந்தப் பேரிழப்பை எவ்வகையில் சகித்துக் கொள்கின்ருர்கள் என்பதனை நினைத்தும் பார்க்க முடியாதுள்ளது. எனினும் இந்த நினைவில்தான் நாம் மன அமைதி அடைய வேண்டியவர்களாய் இருக்கின்றோம். இவ்வளவிற்கும் எதனையும் வெளிப்படையாக மனம் திறந்து களங்கமின்றிக் கலகலப்பாய்ப் பேசும் இனிய சுபாவமும், அன்பாய், தமிழ்ப்பண்பாய் இன்முகத்துடன் வரவேற்று உபசரிக்கும் தன்மையும், இதர பண்பான பழக்க வழக்கங்கள் பலவுந்தான், பழகும் அனைவரையும் அன்பெனும் கயிற்ருல் இறுகப் பிணைந்திருக்கின்றது என்ருல் மிகையாகாது. இந்த அன்பான பண்பான நண்பியை இழந்து விட்டோம் என்ருல் அதனை விதி செய்த சதியே என்றல்லாது வேறு என்னவென்றுதான் சொல்லுவது?

தான் மனங்கொண்ட கருத்துக்களைத் திறம்பட முன்வைக்கும் சொல்வன்மையும், பிறரைச் சிந்திக்க வைக்கும் கவித்துவமும் அன்னுரின் கல்விச் சோலையில் அழகுபடுத்தும் வாடா மலர்களாக விளங்கின. குடும்பக் கல்விச் சோலையில் தன் ஆற்றல் குறைந்ததல்ல எனும் வகையில் தமிழ்ச் சிறப்புத் தேர்ச்சியில் சிறப்புறக் கற்றுச் சிறந்ததொரு சித்தி பெற்றிருத்தமை யாவரும் அறிந்ததே. மேலும் உயர்கல்வி கற்றுப் பலருக்கும் பழந்தமிழின் பெருமைகளை வெளிக்கொணர வேண்டுமென நினைத்த எண்ணங்கள்தான் எத்தனை! அதனை எவ்விதம் ஒழுங்

குபடுத்திச் செயற்படுத்த வேண்டுமென வகுத்த திட்டங்கள்தான் எத்தனை! இத்தனை எண்ணங்களை எல்லாம் செயற்படுத்துமாற்றலும் உளத்திடமும் இருந்தும் அவற்றையெல்லாம் ஆற்றுமுன் மறைந்தது காலன் செய்த கொடிய வஞ்சந்தான் என்று கூறலாமே தவிர வேறு ஏது என்று சொல்வது?

தன்னலம் கருதாது பிறர்நலம் நோக்கும் அளப்பரிய பண்பினை நண்பி செல்வி தமிழரசி வேந்தனாரின் சிறப்பியல்புகளில் ஒன்றாய் நோக்கக்கூடியதாய் இருந்தது. தன் சகமாணவிகளுக்கும் ஏனைய துறையில் ஈடுபாடு கொண்டவர்களுக்கும் கல்வி சார்ந்த ஐயம், விளக்கமின்மை போன்றவற்றிற்குத் தன் சிரமம் பாராது மனமுவந்து தன்னாலான உதவிகளை வழங்குவதில் என்றுமே பின்னின்றதில்லை. குறுகிய கால பல்கலைக்கழக விடுமுறைகளில் கூட தான் பெற்ற இன்பம் வையகம் பெறுக எனுமாற்போல் தான் கற்றறிந்தவற்றை பிறருக்கும் போதிப்பதில் சிறிதும் தயங்குவதில்லை. இத்தகைய சேவைகளைத் தன் கடமையெனக் கூறும் ஓர் இலட்சியவாதியை இழந்துவிட்டோம் என்பது உண்மையில் சகிக்க முடியாத ஒன்றேயாகும். தன்னலத்தில் அக்கறையற்றதுபோல தன் உடல் நலத்திலும் அக்கறை கொள்ளாது விட்டமைதான் இந்நிலைக்கு இட்டுச் சென்று விட்டதே என நினைக்கையில் விதியை அன்றி வேறு யாரைத்தான் நோவதோ! எல்லாரும் இன்புற்றிருக்க விழையும் அந்த உயர்ந்த உள்ளத்தின் மனப்பாங்கினை இவ்வுலகை விட்டுச் செல்லுமுன்னர் உரையாடிய இறுதி வார்த்தைகளினூடாகத் தெளிவாக உணரலாம். இத்தகைய உயர்ந்த பண்புகளைக் கொண்டிருந்தது மட்டுமன்றி உடன் பிறவாச் சகோதரிபோல எனது நலம் நாடி பலவிதமான இன்னல்களிலும் நல்லாலோசனை வழங்கிய ஓர் உண்மை நண்பியை இழந்துவிட்டேன் என்பதனை நினைக்க நினைக்க உள்ளத்தின் தவிப்புத்தான் கட்டுக்கு அடங்குவதாயில்லை. இவற்றையெல்லாம் நினைவில் நிழலாய் விட்டுச்சென்ற நண்பியைப்போல ஒருவரை மீட்டுப் பெறுவதென்பது கனவிலும் வந்தமைய முடியாததொன்று எனத் திடமாகக் கூறலாம்.

இவ்விதமான நற்பண்புகளைத் தன்னகத்தே கொண்டிருந்த தமிழரசி வேந்தனாரைக் காலன் கவர்ந்தெடுக்கக் கண்மூடி, இறைவனே! நீ கல்லாய் இருந்து விட்டாயென்றால் நாம் என் செய்வது? நோன்பு, விரதங்கள் கைக்கொண்டு எங்கிருந்தபோதும் உனை மறவாது உன்

சந்நிதானம் நாடி உன்னடி தொழுத ஒரு பக்தையை என்னென்றும் பாராது கைவிட்ட நிலைதான் ஏனோ? பல்கலைக்கழகப் படிப்பின்போதும் வெள்ளி தவறாது வெள்ளவத்தைப் பிள்ளையாரை நாடியதும், நல்லூர்க் கந்தனை தரிசனையோடு வழிபட்டதும் தவறா வழக்கமாய் கொண்டிருந்தது உன் கண்ணில் படவில்லையோ? உன் மனந்தான் இதற்கு எவ்விதம் இசைந்ததோ! இதுதான் விதி என்பதற்கு நீ காட்டும் சான்றோ?

அன்பின் நண்பியே! ஏன்தான் எங்களைவிட்டு நாம் கண்காணாத இடத்திற்குச் சென்றீர்கள்? இங்கிருந்தபோது ஏதுதான் உங்களுக்குக் குறை? சிறு குழந்தைபோல அரவணைத்துச் சீராட்ட அருமைத்தாய்; இனிதாய் துணைநிற்க இனிய சோதரி; அன்பு கொட்டி ஆதரிக்க அண்ணன்; அருந்துணையாய் இருக்கத் தம்பி; கொஞ்சி மகிழ்ந்து மழலை இன்பம் பெற அன்பு நர்மதா. இன்னும் எத்தனை எத்தனை உற்றார் உறவினர், சுற்றத்தவர்கள். இப்படியிருக்க எவ்விதம் தான் இவர்களை எல்லாம் நிற்கதியாய்க் கலங்கவிட்டுச் செல்ல முடிந்ததோ! எம் மனங்கள் கலங்கித் தவிக்க, ஏழைகளாய் எமைவிட்டு எப்படித்தான் பிரிந்து செல்ல மனம் வந்ததோ! எம் மனந்தான் நோக சுடுகாட்டிற்கு அழைக்க எவ்விதந்தான் முடிந்ததோ! இனி எம் புலம்பல்கள் விம்மல்கள்தான் கேளாதோ! எம் கோலங்கள் புலம்பல்கள்தான் எட்டாது.

ஆனால் உங்கள் உடல்தான் அழிந்தாலும், உருத்தான் மறைந்தாலும் உங்கள் மாண்புறு பண்புகளும் இனிய பழக்கவழக்கங்களும் எங்கள் உள்ளங்களில் என்றும் நீங்கா இனிய நினைவுகளாய் உங்கள் உயர்ந்த உள்ளத்தினை மறக்கா மாண்பினதாய் என்றும் ஒளிவிட்டுத்திகழும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தங்களுடன் மனம் விட்டுப் பழகிய நண்பர்களில் ஒருவன் என்ற ரீதியில் உங்களைப்பற்றி ஒருசில கருத்துக்களை உங்கள் நினைவு தினத்தில் பணிவன்புடன் சமர்ப்பித்துள்ளேன். உங்கள் ஆத்மா சாந்தியடைய எனது மனமார்ந்த பிரார்த்தனைகள், வணக்கங்கள்.

நா. ஞானகுமாரன்
மெய்யியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

* * *

## அன்புத் தமிழரசிக்கு..........

தமிழே தமிழுக்கரசியே தவிக்கவிட்டுச் சென்றதுமேன்?
தனிமையை விரும்பியே தனிவழி சென்றீரோ?
தரணியில் தவிப்பவர்க்குத் தயவுசொல்ல யாருள்ளார்?
தயவுசெய்து சொல்லவேண்டும் தவியாய்த் தவிக்கின்றோம்.

விருப்பிலும் வெறுப்பிலும் எமக்கிடை ஒற்றுமையை அடிக்கடி சொல்வீரே
பிரிகையில் மட்டும் பிறரை வருத்தாது தனியாகச் சென்றீரோ?
அழகையும் அறிவையும் அள்ளித் தந்தவர் அற்பஆயுளை ஏன்தந்தார்
அவரால் முடியுமா உம்மால் ஏற்பட்ட அழியாவிடத்தை நிரப்ப!

அம்மாபடுந்துயருக் காறுதல் சொல்லித் தேற்ற அங்குநீர் அருகிலில்லை
அடிக்கடி அண்ணனை நினைக்கும்நீர் அவருக்கோர் ஆறுதல்சொல்லவில்லை
அன்பான அக்காவிற்கு உம்மைப்போல் ஒருதங்கை அவனியில் எங்கே கிடைப்பாள்
அருமைத் தம்பிஇனி ஆசை அக்காவை எப்பிறப்பில் காணமுடியும்.

புகைப்படம் இருந்தால்தான் என்நினைவுவருமென்றால் தரமாட்டேன் என்றதுமேன்

பூதலத்தைவிட்டு புதுச்சுற்றம்தேடிப் புறப்பட்டுச் செல்லத்தானோ?
தமிழரசிஉமது' நண்பியென்றபடியால் தவியாய்த் தவிக்கின்றேன்
அழியாத இறைவனிடம் வேண்டுவது உமது ஆத்மசாந்தி ஒன்றே

பிரிவால் வாடும்
உதயா வேல்நாயகம்
மட்டக்களப்பு

***

# அருமைத் தோழி தமிழரசிக்கு...........

அன்று மருத்துவமனையில் உன்னைப் பார்த்தபோது என்கரம்பற்றி இன்முகங்காட்டி இளநகை புரிந்தாய். அப்போது நான் கண்ட உன் மேனிப் பொலிவும், உனது மலர் விழிகள் சிந்திய கண்ணீரும் காலனை வென்ற மகிழ்ச்சியின் சின்னங்கள் என்று கருதி உள்ளூர மகிழ்ந்தேன். ஆனால் அன்புத்தோழி நீ எல்லோரையும் ஏமாற்றி விண்ணுலகு புகுந்து விட்டாய். எம்மிடமிருந்து செல்ல விடைபெறவா அன்று கரம் நீட்டிக் கண் பனித்தாய்.

ஓரே வகுப்பில் பயிலாவிட்டாலும் உமது கபடமற்ற உள்ளமும், நேர்மையும் பழகுந்தோறும் நீ காட்டிய பண்பும், அன்பும் என் உள்ளத்தில் என்றும் அகலா நட்பைத் தோற்றுவித்தது. என்னுடன் உரையாடும் போதெல்லாம் பலகலைகளும் கற்றுச் சிறக்க வேண்டும் என்றும் தமிழ்மொழி வளம் பெறப் பணிபல புரிய வேண்டுமென்றும் உனது குறிக்கோள்களை எடுத்துச் சொன்னாய். பல்கலைக்கழகம் புகுந்து கல்விகற்றாய். பட்டமும் பெற்றாய். ஆனால் உன் புகழ் பரவமுன் விண்ணகம் புகுந்துவிட்டாயே! இறைவன் தன் திருவடியில் உன் புகழ் கமழவேண்டும் எனக் கருதினன் போலும்.

அன்புத்தோழி! நீ மறைந்த செய்திகேட்டு ஆற்றொணாத் துயருற்றேன். எனினும் என் உள்ளத்தில் நிழலாடும் உன் எழில் உருவம் உன் மறைவை ஒப்ப மறுக்கிறது. ஊனுடம்பு மறைந்தாலும் உன் கலகலத்த பேச்சையும், செயல்களையும் என்றும் என் உள்ளம் மறக்காது.

சில ஆண்டுகள் பழகிய எனக்கே உன் மறைவு பேரிழப்பாகத் தோன்றின் உனது இளமை நலத்தையும், சீரிய வாழ்வையும் கண்டு மகிழ விருப்பிய அன்பு அன்னையும், அரியசகோதரர்களும் உனது

மறைவை எங்ஙனம்தான் பொறுத்திருப்பார்களோ? அவர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மண்ணொன்று கண்டீர் இருவகைப் பாத்திரந்
திண்ணென் றிருந்து தீவினை சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணானாற்போல்
எண்ணின்றி மாந்தர் இறக்கின்ற வாறே.

என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க, உன் திருவுருவம் மறைந்தாலும் என்றும் அழியா உன் ஆன்மா இறைவன் திருவடியில் சேர்ந்து, அவன் திருவருளை நுகர்ந்து இன்புற்றுச் சாந்திபெற இறைவனைப் பிரார்த்திப் பதொன்றே இந்நிலையில் யான், ஆருயிர்த் தோழியாகிய உனக்கு ஆற்றக் கூடிய பணியாகும்.

உன் பிரிவால் துயருறும் ஆருயிர்த்தோழி
சந்திரா - இரத்தினம்
கோப்பாய்

※ ※ ※

# நட்புக்கு நாயகி

கல்வி பயிலவென்று கல்லூரிவந்து என்னைக்
கொள்ளை கொண்டாயே கொள்கைகள் உடையவளே
நட்புச்கு இலக்கணம் நாமே வகுத்திடுவோம்
நானிலம் போற்றுமுறவில் நட்பைப்போல் ஒருறவை
நான் கண்டதில்லை நட்பாட்சி செய்தாயே
அரசி உன்பெயர் அதுதான் இக்குணம்
அகிலம் உள்ளவரை அகலாது என்மனதில்
உன் நாமம் உன்நினைவு உன் உறவு

ஆசிரியைகள் போற்ற அறிவுக்கலைகள் கற்றோம்
பரீட்சை எடுத்தோம் பல்கலைக்கழகம் சென்றாய் நீ
சிறகொடிந்த பறவையாய் சிந்தை தளர்ந்தேனே
நட்பு உன்னோடு தானென்று கடிதங்கள் வரைந்தாயே
கடிதங்களா? அவை காவியங்கள் அல்லவா!
விடுமுறை தவறாது விரும்பியே சந்திப்போம்
மணிபல தத்துவக்கதைபேசி பிரியாமல் பிரிந்து செல்வோம்
கண்ணன் குசேலனுறவு என்மனதில் நிழலாடும்.

கந்தரனுபூதிமுதல் காவியங்கள் பலவும் கற்றாய்
கலைமாணிப் பட்டம் பெற்றுவிட்டாய் எனவறிந்து
தங்கப் பதுமையே உனைவந்து கண்டேனே
நண்பியாய் சகோதரியாய் இருந்த பெருமையினால்
பொங்கிப் பெருகியது புதுப்புனல்போல் என்னிதயம்
இன்பப் புனலாடி இதமுற்று நானிருக்க
துன்பக் கடலினிலே தூயவளே என்னைவிட்டாய்
இனியாரைச் சந்திப்பேன் என் இனிய நண்பியேநான்

மும்மூன்று ஆண்டாக முத்தமிழ் போல்
நட்பாம் கிழமை கொண்டின் புற்றேம்
ஆண்டுகள் சிலவே ஆனலும் ஆருயிரே
என்னிதயம் நிறைந்தாயே ஏக்கம் விளைத்தாயே
தமிழ் விழாவுக்கு அழைத்து வரைந்த என்மடல்
இறுதியாக உன்கைக்குக் கிடைத்ததுவாம்
என்விருப்பை நிறைவேற்றும் ஏந்திழையே! தமிழ் மகளே!
என்அழைப்பை ஏற்காமல் எம்பெருமானழைப்பை ஏற்ருயோ?

அன்புப்பிணைப்பை மறந்தாயே ஆருந்துயரில் விட்டாயே
இனியநட்பை எமனுலும் பிரிக்க இயலாது
இயங்கமுடியா நிலைதனிலே உனைக்காண வந்தேனே
கண்விழித்துப் பார்த்தாய் கரத்தொடுகரம் புதைத்தாய்
நட்புக்கு நற்சாட்சி நாமகளே நீகதைத்தாய்
இந்நினைவை நினைக்கையிலே என்னிதயம் பொறுக்குதில்லை
உயர் குணங்கள் உள்ளவளே உத்தமியே
உன்னைநான் மறவேன் என்னைநீ மறவாய்.

தமிழ்என்று சொல்லி தலைநிமிர்ந்து நின்றேனே
நவில்தொறும் நூல்நயம் போலப் பயில்தொறும்
இனித்தது உன் பண்புடை நட்பு
நீகூருத கதைகளில்லை நான்மகிழாத நாட்களில்லை
கூற்றுவன் வந்ததனுல் கூருமல் சென்ருய் கூத்தனடிகளுக்கு
உன்னுறவுகள் வாடுதம்மா உன் நினைவில் மாயுதம்மா
கால் நூற்ருண்டு வாழ்கையிலே காவியம் படைத்தவளே
கற்பகக் கல்வியைக் கருத்தாகக் கொண்டவளே.

நீ ஒருமைக்கண் கற்றது எழுமையும் உதவட்டும்
கலைமகள் வாழ்நாட்டில் தேவதையாய் நீவாழ
உலகளந்தநாயகன் தலைமையில் உன்பணிகள் சிறக்க
நான்காண வருமட்டும் என்னிதயக் கூட்டினுள்ளே
நட்புக்கு நாயகியாய் நாளும்நீ வாழ்ந்திடுவாய்
யாமோதிய கல்வியுமெம் மறிவும் தாமேபெற
வேலவர் விரும்பியதால் விண்ணுலகம் அழைத்தாரோ!
வேந்தர் குலக்கொழுந்தை விந்தைமிகு தமிழ்க்கொழுந்தை

சண்முகஜோதி சண்முகம்
உரும்பராய்.

* * *

# அன்பின் உருவம் எளிமையின் சின்னம்

தமிழ்மச்சாள்! தமிழ்மச்சாள்! என்று நாங்கள் அழைத்து வந்த தமிழ்மச்சாள் இன்று எம்மிடையே இல்லை என்று எண்ணும் பொழுது அதை நம்பவே முடியாமல் இருக்கின்றது. கடந்த மூன்றுமாதங்களுக்கு முன் விடுமுறை முடிந்து பேராதனைக்குச் சென்ற பொழுது நான் அவர்கள் வீட்டுக்கும் போய்விட்டே சென்றேன். அன்று அவர் என்னை வழியனுப்பியபோது நான் எண்ணவில்லை 'அடுத்தமுறை நான் வரும் பொழுது தமிழ்மச்சாளைக் காணமுடியாது' என்று. விதியின் விளையாட்டை மாற்ற யாரால் தான் முடியும்.

ஆறு ஏழு ஆண்டுகள் நான் யாழ்ப்பாணத்தில் கல்விகற்கையில் அவர்களுடைய வீட்டிலே தங்கியிருந்து படித்தேன். அக்காலத்தில் அவர்களது குடும்பத்தில் ஒருவனாகப் பழகிவந்த என்னை அவர் தனது இளைய சகோதரனைப் போலவே பாவித்து உரிமை பாராட்டிப் பழகினர். அப்படிப்பட்டவரை இறுதிக்காலத்தில் பார்க்கக்கூட கொடுத்துவைக்காத துர்ப்பாக்கியசாலியாகி விட்டேன் நான். கடந்த விடுமுறையில் அவர்களின் வீட்டிற்குச் சென்றிருந்த சமயத்தில் என்னை வழமைபோல ''டேய் விக்கினேஸ்வரன்'' என்று அவர் அழைத்தவிடத்து அவரின் தாய் ''நீ என்ன அவனை இன்னும் 'டேய்' என்று கூப்பிடுகிருய்', என்று கூறினர். அப்போது அவர் ''இவன் எப்படி இருந்தாலும் எப்பவும் இப்படித்தான் கூப்பிடுவேன்'' என்று உரிமையோடு கூறினர். இவ்விதம் உரிமைபாராட்டி அன்புகாட்டிய தமிழ்மச்சாளை இழந்து விட்டோமே என்று எண்ணுகையில் ஏற்படும் கவலையை யாரிடம்கூறி ஆற்றிக் கொள்ள முடியும்.

அவருடன் பழகிய காலங்களில் அவரைப்பற்றி நான் புரிந்து கொண்டவை சில. எப்போதும் எளிமையாக வாழ்ந்த அவர், தனது உடைகளிலும், பழக்க வழக்கங்களிலும் எப்போதும் எளிமையாகவே திகழ்ந்தார். அதேபோல் அவரது இலட்சியங்களும் மிகவும் எளிமையானவையாகவே இருந்தன. ஒவ்வொரு சாதாரண மனிதனும் தான் படித்து பெரியபதவி வகிக்கவேண்டும், உழைத்து ஒரு பெரும் பணக்

காரணுகி தன்னைப்பார்த்து நான்குபேர் புகழவேண்டும் என்றே ஆசைப் படுவான். ஆனுல் தமிழ்மச்சாள் தனது வாழ்க்கையில் தான் ஓர் ஆசிரியையாக வந்துவிடவேண்டும் என்ற ஆசையுடனேயே இருந்தார். சில வேளைகளிற் கூறுவார் "என்னை இலவசமாகவேனும் ஆசிரியைத் தொழில் செய்யும்படி சொன்னுல் நான் மகிழ்ச்சியுடன் செய்வேன்" என்று. அடுத்த அவருடைய விருப்பம் தான் தனது காலில் நிற்க வேண்டுமென்பதாகும். தான் உழைத்து தனது தாய், சகோதரர்கள் உறவினர்கள் நண்பர்கள் எல்லோருக்கும் உதவிசெய்து வாழவேண்டும் என்றே விரும்பினுர்.

இவர் தனது தாய் சகோதரர்களிடம் வைத்திருந்த அன்பு அலாதியானது. அதிலும் அவர் தனது அண்ணன்மேல் வைத்திருந்த அன்புக்கு நிகர் எதுவுமே இல்லை எனலாம். வானெலியில் "மலர்களைப் போல் தங்கை உறங்குகிறுள் அண்ணன் வாழவைப்பான் என்று உறங்குகின்ருள்" என்ற பாடல் ஒலித்தால் அதனைத் தனது அண்ணன் தனக்கே பாடுவதுபோல் இரசித்து மகிழ்வார். அவருக்குத்தெரியுமா! மீளா உறக்கத்தில் ஆழ்ந்துவிட்ட தனது தங்கையை எப்படி வாழவைப்பேன் என்று அண்ணன் ஏங்குவது!!

அன்பின் உருவமாகவும் எளிமையின் சின்னமாகவும் திகழ்ந்த அவர் தனது இலட்சியத்தின் முதற்படியாக 'பட்டதாரி' யாகி, தொடர்ந்து ஒரு ஆசிரியையாக வந்துவிடலாம் என எண்ணிக் கொண்டிருக்கையிலே அவரது இலட்சியத்தை நிறைவேற்ற விடாமலேயே அழைத்துவிட்டான் ஆண்டவன்.

ஆ! இந்த இறைவனுக்குத்தான் மனிதருடைய இலட்சியங்களை நிறைவேற்ற முடியாமல் தடுப்பதில் எத்தனை ஆசை!

தனது இலட்சியங்களை முற்றுக நிறைவேற்ற முடியாமல் மறைந்துவிட்ட அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக!

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

—ந. விக்னேஸ்வரன்—

✳✳✳

# எங்கு நீ சென்றாய்

அண்ணா என்றழைத்து அன்பாய் அக(ம்)மகிழும்
என்னைத் தங்காய்! எங்கு நீ சென்றாய்
உன்னை அண்ணன் உணர்வதை புரிந்திடாது
என்(ன)ஆசை கொண்டாய் எங்கு நீ சென்றாய்.

எண்ணாதிருந்திடாய் என்றும் எனை - இன்று நீ
விண்ணாளச் சென்றதன் விளக்கம் என்னவோ
அண்ணாவிற்கு தங்கைகள் அதிகம் என்று நீ
விண்ணாளச் சென்றாயோ விளக்கிட மாட்டாயோ

மணக்கோலம் காண மனம்கொண்டு நானிருக்க
பிணக்கோலம் காட்டி பிரிந்துநீ சென்றாயோ
உனக்கேன் இவ்வாசை உரைத்திட மாட்டாயோ
எனக்கேன் இத்தண்டனை என்தங்காய்! சொல்லாயோ

மறையவர் வேதமுரைக்க மணவறையில் நீயிருக்கும்
மணநாளை எண்ணி நான் இருக்க
பறையது கொட்டிட பாடையில் படுத்து
பாவியெனை விட்டு எங்குநீ சென்றாய்

உற்றவர்கூடி உளம் மகிழ்ந்து அறுகரிசி
உனக்கிடும் நாளை உவப்புடன் நான்நோக்க
உற்றவர் அழுது உளம்நொந்து வாய்க்கரிசி
உனக்கிடும் நிலையதை உருவாக்கி எங்குநீ சென்றாய்

அண்ணனாய் பலரை அகிலத்தில் கண்டுவிட்டேன்
அதிலில்லை ஒருவரும் என்போல் பாவியாய்
திண்ணமாய் நானறிவேன் திரிபில்லை இக்கூற்றில்
தீயிட்டேன் தங்கைக்கு திருமண வயதினில்

எதையும் என்அண்ணு எனக்காக செய்வார்
என்று மகிழ்ந்திட்ட என்தங்கையே உன்
சிதையும் என்கையால் செந்நெருப்பை பெற்று
சிறு சாம்பலாகி சிதைந்தது இங்கு

இதையும் உன் அண்ணன் இயற்றுவன் என்றே
என் தங்கை நீயும் எல்லோரிடமும்
எதையும் என்அண்ணு எனக்காக செய்வாரென
இயம்பி நின்றனேயோ ஏதும் அறிந்திலேன்

கோபியாய் இருத்தல் கூடாதண்ணு என்றுநீ
கோடி அறிவுரைகள் கூறியெனைத் திருத்தி — இன்று
பாவியாய் இப்பாரில் பரிதவிக்க விட்டெனை
பறந்தெங்கு நீசென்றுய் பகர்ந்திட மாட்டாயோ

உன் அண்ணன் உறவினையும் உதறிவிட்டு
உலகை மறந்து நீ உறங்கினையோ
என்அண்ணு என்அண்ணு என்றுநிதம் எனை
இனி யழைப்பார் யாருள ரிங்கு

உன்னிடம் வரவில்லை ஒருநாள் என்றால்
உளம் நொந்து வருந்திடுவாய் - இன்று
என்னிடம் சொல்லாமல் எங்குநீ சென்றுய்
எப்படியும் வருவாய் என்னிடமே நீ.

— அண்ணு —

***

## தரணியில் எனக்கோர் தங்கை தமிழே

தரணியில் எனக்கோர் தங்கையுண் டென்று
யான்சாற்றி மகிழ வந்த தமிழே!
பரந்த இவ்வுலகிற் பலரும் மதிக்கவே
பல்கலைப் பட்டம் தன்னைநீ பெற்றபின்
நிரந்தரமா யோர்துணையினைத் தேடியுனக் களித்து
நிலைத்த வாழ்வு தனைத்தர விரும்பினோம்
கரந்த மனத்தான் காலனவன் செய்த
கொடுமை சிதைத்த தம்மாஎம் விருப்பை.

தங்கையுன் மணக்கோல மதனைக் கற்பனையிற்
கண்டு களித்தே கற்பனைக் கனவதனை
நீங்காமல் அற்புதமாய் நிறைவேற்றக் காலமதை
நாடியே இருந்தேன் கொடிய காலன்
இங்கித மில்லாமல் என்ஆருயிர்த் தங்கையுனை
இங்கிருந்தே பறித்து விட்டான் ஐயோ!
பங்கமாய் என்நினைவும் பாழாகிப் பகற்கனவாய்
பரிதவிக் கின்றேன் பாவியேன் நானே.

"என்தன் அக்காவின் இன்பமார் மணநாளில்
என்னுயிர்த் தோழிகாள் வந்து கலந்திடுவீர்"
என்றன்று நன்மடல் விடுத்தவருடன் கூடியே
என்தன் மணநாளைச் சிறப்பித்தாய் தங்கைநீ.
இன்றுன் அக்காநான் இறப்பறிந் தோடிவந்த
உனுருயிர்த் தோழிகட்கு உயிர்ப்படங்கி உருமாறிய
உன்தன் கோலத்தினைப் பேழையுள் காட்டினேன்
இதுவா நான்செய நினைத்த நன்றிக்கடன்.

மனையிற் பொலிவுடனுனை அலங்கரித்து மங்கல
மணவாழ்த்தினை வழங்க வேண்டிய வயதினில்
நினைவுக்கு உன்தன் படத்தினை வைத்தே
நினைவாஞ்சலி பாட முயல்கின்றோம் பாவியேம்
நினைவை விட்டுநீங் காவென் உடன்பிறப்பே!
நினைவறிந்த நாளிலிருந் துனைநான் அறிவேன்
எனைவாட்டும் உன்நினைவுகள் எல்லாம் – அவற்றை
எழுத்தில் வடிக்க இயலா தம்மா.

ஐம்பத்திமூன் றுமாண்டு ஐந்துவயதுக் குழந்தை
நானும் தங்கைநீ பிறந்தமை அறிந்து
நம்பெரிய மாமாவுடன் தங்கையுனைப் பார்க்க
வேலணை இருந்து விரைந்தே வந்தேன்
செம்மையாய் 'றிக்ஷோ'வில் கந்தர்மடத் தெம்வீட்டில்
வந்தழகுத் தங்கையாம் பச்சைப் பாலனுனை
எம்மன்னை அருகினிற் கண்டநினை வின்றுமுண்டு
நினைவகல வில்லைநீ யகன்றாய் என்கொடுமை.

அறுபத்தாறு இறுதியில் அடைந்தோம் பேரிழப்பு
அருமைத் தந்தை பிரிந்தா ரெமைவிட்டு
பெறுதற்கு அரியவரை இழந்து பெற்றவள்
தன்னையே கொண்டோம் தாயாய் தந்தையாய்
பொறுப்பினை உணர்ந்தவளும் பொறுத்தே வாழ்ந்தாள்
கொணர்ந்தாள் நன்னிலைக்கு, இளையமகள் உன்தன்
பொறுப்பினையும் இனிதே நிறைவிக்க எண்ணுகையில்
பெற்றவயிறு துடிக்கப் பேரியமன் பறித்தானே.

"நல்லவெங்கள் அம்மா தான் பெரிதெனக் குலகிலெ''ன்றுநீ
நாளும்சொலும் வார்த்தையினைக் கேட்டவள் எம்அம்மா
''செல்வமகள் என்தன் தமிழும் சிறப்பாய்ப்
பல்கலைப் படிப்பதனை முடித்து விட்டால்
நல்லவள் அவளையும் ஒருவனிடம் ஒப்படைத்து
நலமாய் வாழ்வதைக் காண்பேனெ''ன நினைத்தாள்
வல்லவள்நீ பல்கலைப் பட்டமெய்திய வுடனியமன்
வாரியே உனைச்சென்றால் பொறுப்பாளோ அவ்வன்னை.

''அன்புநிறை பெண்சகோ தரங்கள் அதிகமாய்
இருந்திடில் இன்பமும் உதவியும் பலவாம்''
என்றே பகர்ந்து எங்கள்குறை உணர்த்தும்நீ
ஒன்றே தங்கை அவளொருத்தியே துணையெனக்கு
என்றுனையே நம்பிய எனையழைத் திறுதியில்
''அக்கா தனித்தீர்கள்'' என்றே அலமந்து
சொன்னாய் ஐயோ! அவ்வார்த்தை மெய்யாகத்
தவிக்கின்றேன் நானே தங்காய்நீ அறியாயோ.

''அக்காவின் பிள்ளைகளை நானே வளர்த்திடுவேன்
அன்புடைச் சித்தியாய் இருந்திடுவேன் என்றும்''
எக்காலம் தொட்டு சொன்னாயிதை? செய்தாய்
எண்ணியே ஈரொன்பது மாதம் அதற்குள்இனி
எக்காலமும் சித்தியில்லை என்பிள்ளைகட் கெனும்படி
எழுதிவிட்டான் இறைவன் ஏங்கியே சென்றாய்நீ
''தக்கவோர் சித்திமுன் இருந்தாள் உமக்கென்று
பிள்ளைகட்குச் சொல்லும் பாவியானேன் நானே.

"'நல்லவ ரெங்கள் அத்தான் நமக்கு
வல்லதோர் துணையவர்'' என்றே மகிழ்ந்தாய்நீ
'சொல்லாமல் நானறிவேன் எனக்குள்ள கடமைதனை'
என்றுன் அத்தானும் ''எங்கள் தமிழுக்கு
நல்லதொரு காணி நமக்கருகில் வாங்கியே
நடத்திட முயல்வோம் நன்மணத்தை'' என்றார்
கல்மனத்தான் காலன் செய்த கொடூரம்
கடமைதனை மாற்றிவிடக் கலங்குகின்றார் காணுயோ.

"சித்தி'யென்று அழைத்து மகிழ்விக்கும் உன்தன்
செல்லக் குழந்தை நர்மியை நன்றாய்
நித்திரையும் கொள்ளவிடாய் நாளுமவள் வளர்ச்சியை
நவிலும் புதுமொழிகளை நன்றாயறிந் தின்புற்றாய்
வைத்தே மடியிலாட்டிப் பாடிடுவாய் பாட்டுக்கள்
'எத்தனை சட்டைகள் தைப்பேன்பார் உனக்'கென்பாய்
அத்தனையும் மறந்தாயா? மறக்கநீ விரும்பவில்லை
மறக்க வைத்தானே மாய இயமன்.

"அன்புக் குழந்தையென் நர்மியவளைக் காணாது
நானிருக்க மாட்டேன்'' என்றே கூறிடுவாய்
என்றும் காலையில் எழுந்தவுடன் எம்மறைக்கே
வந்திடுவாய் முதலிற் குழந்தையினைப் பார்க்க
அன்று மானிப்பாயில் அன்புநர்மியுன் அருகணைந்து
'சித்திநர்மி' என்றதும் சிரித்தாய் கையெடுத்தாய்
"என்றும்வாழ் க''வென்று வாழ்த்தினாயா இறுதியில்?
ஏதுமறியோம் 'சித்தியில்லை' என்றேங்கு கின்றாள்நர்மி.

''என்அண்ணு போலில்லை உலகிலெவரும்'' என்றுகூறி
அண்ணன் நிழலில் வாழ்ந்தாய் நான்காண்டு
என்றும்நீ விரும்பியதை இன்புடன் அளித்தவனும்
தங்கையுன்தன் நலனே தன்னலனெனக் கொண்டான்
'இன்னுமோர் சிறப்பினை தங்கைக்கு செய்தென்
கடன்முடிப்பேன்' என்றே தேடினன் மணாளனை
இன்றோ 'தங்கைக்கு நான்செய்த இறுதிக்கடன்
இதுவா? என்றே தவிக்கின்றான் உன் அண்ணன்.

''எல்லோர்க்கும் இளையவன் தம்பி இளஞ்சேயை
இன்பமாய் நாம்வாழ வைப்போம்'' என்றாய்நீ
'நல்லதோர் அண்ணு நலன்விரும்பும் அக்கா
இருவர் எனக்குளர்' என்றின்புற் றானவனும்
எல்லோரும் நிற்கையில் அவனை அழைத்தே
மானிப்பாயில் ''இருவர் உனக்கேன்'' எனக்கேட்டாய்
பல்தடவை கேட்டதன் பொருளை அன்றறியான்
இன்றறிந்து துடிக்கின்றான் உன்தன் பிரிவால்.

எங்கள் எண்ணமெல்லாம் உன்தன் மணவாழ்வில்
உன்எண்ணமோ உயர்கல்வியும் சிறப்புறு உத்தியோகமும்
''பொங்கும் ஆர்வமுடன் புகுந்திடுவேன் தமிழாய்வில்
எடுத்திடுவேன் முதுமாணிப் பட்டமதனை விரைவில்
தங்கு தடையிலாது தொழில் தாங்கிடுவேன்''
என்றெண்ணி விரும்பினாய் கொழும்பு செலவிரைந்து
தங்கிய மனஆசைகள் அத்தனையும் மறந்தின்று
விரைந்தே சென்றாய் விண்ணுலகு விரும்பாமலே.

மாதமொன்றில் நோயினல்நீ யுற்றகஷ்டம் நான்கண்டேன்
மனதிலெண்ணிய எண்ணமெலாம் நானறிந்தேன் கேட்டு
"சாதகமாய் என்தன்நோய் மாறுவிடில் சிறப்புத்தரு
பட்டம் பதவியுடன் திருமணமும் வேண்டேன்
சாதலற்று இவ்வுலகில் சிலகாலம் வாழவேண்டும்
வாழவழி செய்யுங்கள் மருந்துட னென்றுலும்"
பாதகமற் றவள்நீ பரிவுடன் கூறினையிதை
பாதகிநான் கேட்டேன் பரமனவன் கேட்டாளு.

எத்தனைதான் சொன்னுலும் என்னுளமடங் காதம்மா
எதனைத்தான் நான்மறப்பேன்? எங்குமுன் தோற்றமே
இத்தனை காலமொன்ருய் வாழ்ந்தோம் மகிழ்ந்தோம்
இனிநான் தனித்தேன் தங்கைநீ இன்றி
எத்தனைதான் இருந்தாலும் உடன்பிறந்த வளே! உன்
உதவிபோல் வேருெர் உதவியுண்டோ உலகில்
இத்தனை காலம்நான் பெற்றவுதவி போதுமென்று
தந்த இறைவன் பறித்துவிட் டானுன்னை.

'தமிழ் தமிழ்' என்றுநான் அழைத்தாலும் தங்கைநீ
தரணியில் என்றுமே 'அக்கா'வென வந்திடாயினி
ந(ா)மிருவர் இணைந்து செலுமின்பக் காட்சியினி
நனவில் இல்லை கனவில் தானம்மா
இமிழ்கடல் சூழ்உலகின் இயல்பிது வென்றே
எண்ணியாறிட முடியுமா? இதயம் குமுறுகிறது
தமிழே! என்தங்காய்! எங்குமென்தன் நெஞ்சிலென்றும்
நீவாழ்வாய் உன்தன் நினைவுகள் வாழும்.

- அக்கா -

* * *

சித்திரா அச்சகம் 510, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.